# பேராசிரியர் ஞான சுந்தரம் மறைவு! தமிழுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு!



## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இரங்கல்!

**பே**ராசிரியர் ஞானசுந்தரம் அவர்கள்
மறைந்த செய்தி அறிந்து
மிகுந்த வேதனை அடைந்தேன்!
பேராசிரியர் ஞானசுந்தரம் என் இனிய நண்பர்
பச்சையப்பன் கல்லூரியில்
நான் BA படித்துக்கொண்டு இருந்தபோது
அவர் M.A படித்துக்கொண்டு இருந்தார்.
கல்லூரிகளுக்கிடையே நடக்கும் பேச்சுப்போட்டிகளில்
நானும் ஞானசுந்தரமும்
பச்சையப்பன் கல்லூரி சார்பில் கலந்துகொண்டதும்,
ஏராளமான சுழற்கோப்பைகளையும், பரிசுகளையும் வாங்கி
எங்கள் கல்லூரிக்கு பெருமை சேர்த்ததும்,
நேற்று நடந்தது போன்று என்நினைவில் இருக்கிறது!
பேராசிரியர் ஞானசுந்தரம் மறைவு
தமிழுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு!
அவரது குடும்பத்திற்கு
எனது ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்துக்கொள்கிறேன்.



**துரைமுருகன்**
*கழகப் பொதுச் செயலாளர்*

## கோவை மாநகரில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

கோவை, ஜன. 30 –

கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சிவபிரகாசம் வரவேற்புரையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை யாற்றினார்.

இதில் கழக தீர்மானகுழு செயலாளர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் அருள்மொழி, மீனா ஜெயக்குமார், தமிழ்ச்செல்வன், நாச்சி முத்து, கோகுல், முரா.செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் சிங்கம் புனரி அண்ணா மன்றத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். ம உடன் மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில கழக செய்தி தொடர்பு குழு துணைத் தலைவர் மருதுஅழகுராஜ், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ , திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் எஸ்.சுந்தரராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்,பி, தலைமையில்

# நெல்லைக்கு தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

*நெல்லை, ஜன. 30 -*

கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையிலான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு நெல்லை இன்று (30.01.2026) வருகை குறித்து திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழகசெயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை வருமாறு;

நெஞ்சம் நிறைந்த தலைவர், திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி மக்களின் எதிர்பார்ப்புகள், கனவுகள் என்ன என்பதை அவர்களின் மூலமே அறிந்து அதற்கேற்ற வகையில், மக்கள் பங்களிப்புடன் தேர்தல் அறிக்கை



அமைய வேண்டும் என்ற உயரிய தொலை நோக்கத்துடன், கழகதுணை பொதுச் செயலாளர் திருமிகு.கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையிலான கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களை சந்தித்து நமது மாநில வளர்ச்சிக்கு தேவையான, ஆக்கபூர்வமானகோரிக்கைகளை கேட்டு வருகிறார்கள்.

அந்த வகையில் இன்று (30.01.2026வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்குநெல்லை சந்திப்பு, ஆரியால்ஹோட்டலில் உள்ள அபிநயா ஹாலில் நடைபெறும் கூட்டத்தில், நெல்லை மாவட்ட மக்களின் கோரிக்கைகளை கேட்க வருகை தருகிறார்கள். நமது மாவட்டத்திற்குட்பட்ட வணிகர் சங்கங்கள், விவசாயிகள் நல சங்கங்கள், நெசவாளர்கள், மீனவர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், பொது நல சங்கங்கள், சமூக நல அமைப்புகள்,தன்னார்வலர்கள் போன்ற பொது நலனில் அக்கறை கொண்ட அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் இந்த கூட்டத்தில் பங்கேற்று, கழக தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் வகையில் தமிழ்நாட்டு மக்கள் நலனுக்கும், மாவட்ட வளர்ச்சிக்கும் தேவையான ஆக்கபூர்வமானகோரிக்கைகளைஎழுத்துப் பூர்வமாகவும், நேரிலும்தெரிவிக்கும் வகையில், பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழக செயலாளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.


# ரூ. 22 கோடியில் கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்! முதல்வர் திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சிவகங்கை. ஜன. 30 –

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா கீழடியில் ரூபாய் 22 கோடி செலவில் திறந்தவெளி அருங்காட்சியகப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த திறந்தவெளி அருங்காட்சியகத்தினை நாளை (31ஆம் தேதி சனிக்கிழமை) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

இது குறித்து திருப்புவனத்தில் கூட்டுறவுத்துறை கே ஆர். அமைச்சர் பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறிய தாவது. தமிழர்களின்



கலாச்சாரம், நாகரிகம், உலக மெங்கும் பறைசாற்றும் வகையில் கீழடி அகழ்வாராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது .

இது தமிழகத்தின் 2600ஆண்டுகளுக்கு முந்தைய நாகரிகம் கலாச்சாரம் பண்பாட்டினை உலகம் முழுவதும் தெரியும் வகையில் அமைந்துள்ளது. தமிழக முதல்வரின் சீரிய முயற்சியால் இந்த கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.அங்கு கிடைத் த பொருட்கள் அனைத்தும் காட்சிபடுத்தப்பட்டுள்து. தற்பொழுது அதை தொடர்ந்து திறந்தவெளி அருங்காட்சியகம் ரூபாய் 22 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது . சுமார் 4.5 ஏக்கரில் நில உரிமையாளர்களுக்கு ரூபாய் 6 கோடி பணம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரூபாய் 22 கோடியில் இங்கு திறந்தவெளி அருங்காட்சியகம் அமைகிறது.முதல்வர் தளபதி அவர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பலமுறை கீழடியில் அருங்காட்சியகம் அமைய வேண்டும் என்று முதலில் குரல் கொடுத்தார்கள். தற்பொழுது முதல்வரானதும் கீழடி அருங்காட்சியகம் அமைக்க திட்டமிட்டு அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதல்வர் அவர்கள் பலமுறை கீழடிக்கு வருகை தந்துஅருங்காட்சியக பணிகளை பார்வையிட்டு கீழடி அருங்காட்சியகத்தினை திறந்து வைத்தார்கள். அதை தொடர்ந்து ரூபாய் 22 கோடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ள து. இந்த திறந்தவெளி அருங்காட்சியகத்தினை நாளை (31ஆம் தேதி சனிக்கிழமை) பிற்பகல் திறந்து வைத்து மக்களுக்கு அர்ப்பணிக்க உள்ளார்கள். இந்த கீழடி அருங்காட்சியகம் தமிழர்கள் வாழ்ந்த பண்டைய நகரமாக கருதப்படுகிறது. நாகரிக நகரமாகவும் கருதப்படுகிறது. நம்முடைய பழமையான கலாச்சார முறைகள், வாழ்க்கை முறைகள் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகள் இதன் மூலம் தெளிவாக தற்போதைய சந்ததியினர் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது . பொதுப்பணி துறைசார்பில் இந்த திறந்தவெளி அருங்காட்சியகம் மிகவும் நவீன முறையில் பழமை மாறாமல் அழகுற அமைக்கப்பட்டு வருகின்றது .

இத்திட்டப் பணிகளை பொதுப் பணித்துறை அமைச்சர்எ.வ.வேலு அவர்கள் அடிக்கடி வந்து பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தி உள்ளார். இதற்குரிய அமைச்சர் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் பல் முறை இங்கு வந்து பார்வையிட்டு இந்த பணிகளை துரிதப்படுத்தி உள்ளார். தற்பொழுது இப்பணிகள் முடிவ டைந்துவருகிற 31 ஆம் தேதி சனிக்கிழமை முதல்வர் அவர்கள் கீழடிக்கு நேரில் வருகை தந்து மக்களுக்கு அர்ப்பணிக்க உள்ளார். இந்த அருங்காட்சி யகம் அமைவதன் மூலம் இந்த மாவட்டம் சுற்றுலா தளத்தில் உலக அளவில் முதன்மை மாவட்டமாக அமையும் வாய்ப்பு உள்ளது .

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் கூறினார் .

முன்னதாக அமைச்சர் கீழடியில் நடைபெற்றுவரும் திறந்தவெளி அருங்காட்சியகப் பணிகளை ஆய்வு செய்தார். அவருடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கை மாறன், மானாமதுரை நகர் மன்ற தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ . எஸ். மாரியப்பன் கென்னடி , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ, ஒன்றிய செயலாளர் எம்.ஏ. கடம்ப சாமி, ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், திருப்புவனம் பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி, அச்சங்குளம் முருகன் அண்ணாமலை , முன்னாள் கீழடி ஊராட்சி மன்ற தலைவர் வெங்கட் சுப்பிரமணியன் ,ரவி,வட்டாட்சியர் ஆனந்த பூபாலன் மற்றும் அதிகாரிகள் சென்றிருந்தார்கள் . கீழடி அருங்காட்சியக காப்பாளர் சிவானந்தம் ,ரமேஷ் ஆகியோர் திறந்த வெளி அருங்காட்சியக பணிகள் குறித்து அமைச்சரிடம் விளக்கி கூறினார்கள்.

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*மதுரை, ஜன. 30-*

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 01-02-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 06.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற இருப்பதால் மாவட்



டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழகசெயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

- பிப்ரவரி-7விருதுநகரில் நடைபெறும் இளைஞர் அணி மண்டல மாநாடு குறித்து,
- வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைகுறித்து,
- பிப்ரவரி-21மதுரையில் நடைபெறும் BLA-2, BLC, BDOமாநாடு குறித்து,
- கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், ராதாகிருஷ்ணன் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநில அணி வசந்தம் ஜெயக்குமார், அன்பழகன், துறைமுகம் பிளாரன்ஸ், தொகுதி பார்வையாளர்கள் இன்பா ஏ.என்.ரகு, பெருமாள், கணேசன், நகரச் செயலாளர்கள் கருணாநிதி, சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், ஒன்றிய செயலாளர் சின்ன பாண்டியன், சுப்பிரமணியன், முருகேசன், கருப்பசாமி, செல்வராஜ், மும்மூர்த்தி, காசி விஸ்வநாதன், ராதாகிருஷ்ணன், நவநீதக்கண்ணன், சின்ன மாரிமுத்து, அன்பு ராஜன், ஜெயகண்ணன், ராமசுப்பு, இம்மானுவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்டம் வடக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக புதூர் பகுதிக்குட்பட்ட 10வது வார்டு கற்பகம் நகர் பகுதி பொதுமக்களுக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், அறிவு நிதி, சரவணன் அம்பலம், குரும்பன், புண்ணியமூர்த்தி, அன்பு என்கிற துரை கோபால்சாமி, ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், வி.சி.மாதவன், ஆழ்வார், தமிழ் சந்திரன், ராஜேஸ் என்ற பாக்கியராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமை ஏற்று நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகம் வள்ளியூரில் பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் சுபாஷ் தங்க பாண்டியன் ஆகியோர் ஏற்பாட்டில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில் அ.தி.மு.க.அ.ம.மு.க. கட்சிகளைச் சேர்ந்த பெண்கள் உள்பட 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு, மாவட்டப் பொறுப்பு குழு உறுப்பினர்கள் அல்போன்ஸ்,ஆதி பாண்டி மூலக்கரைப்பட்டி பேரூர் செயலாளர் எஸ்.எஸ்.கே.முருகையா,பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# மிரட்டும்... சோழர் படை

**ரா**ஜராஜ சோழனின்
அடிபற்றி
ஆட்சிக்கு வந்த
ராஜேந்திர சோழன்

சோழப் பேரரசின்
பரப்பளவை
ஆழக் கடல் கடந்து
அகலப் படுத்தினான்..

இலங்கை
மாலத்தீவு
கடாரம்
சிரீவிசயம்

மலேயா
சிங்கப்பூர்
சுமத்ரா
கம்போடியா

வியட்னாம்
இந்தோனேசியா
மியான்மர்
வங்கதேசம் என

தெற்காசியா
முழுவதும் அந்த
சுத்த வீரச்
சோழனுக்குச்
சொந்தமானது

கடாரம்
கொண்டவனாகி
கடல் கடந்த
பேரரசை
கட்டி எழுப்பினான்..

மேலும்

தென் இந்திய
பகுதிகளான

தமிழ்நாடு
ஆந்திரம்
கருநாடகா
கேரளம்

தெலுங்கானா
இவற்றோடு
சத்தீஷ்கர் ஒரிசா
மேற்கு
வங்கத்தையும்

அந்த
கம்பீரச் சோழனே
கைப்பற்றினான்..

இப்படி

பொன்னி
நதிக்கரையில்
சூல் கொண்டு

பொற்காலம்
படைத்த




அந்த புறநானூற்று
வீரத்தை

இன்றைய
தமிழகத்தின்
தற்கால
அரசியலோடு
பொருத்திப்
பார்க்கும்

வடக்கிந்திய
கம்பெனியான
பா.ஜ.க...

தூக்கத்தை
தொலைத்துவிட்டு
துடிக்கிறது...

"ராஜராஜ
சோழனாக
முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினையும்"

"ராஜேந்திர
சோழனாக
உதயநிதி
ஸ்டாலினையும்"

உருவகம்
செய்து கொண்டு
உதறல்
எடுத்து
குதிக்கிறது...

"உதயநிதி
உதயநிதி" என

ஊரெல்லாம்
உலாவந்து
ஊளையிட்டு
தகிக்கிறது...

"திராவிட மாடல்
நாளை

தேசத்தின்
மாடலாகுமோ"
எனும்
அச்சத்தில்

தலைக்கு
விலை
வைப்போம்
என்றும்

தரம் தாழ்ந்து
குரைக்கிறது..

"ஸ்டாலின்
மோர் டேஞ்சர் than
கருணாநிதி"
என

அன்று

அச்சம் கொண்டு
அலறிய எச்சை
ராஜாக்கள்

இன்று

"உதயநிதி
மோர் டேஞ்சர் than
ஸ்டாலின்" எனும்

கூடுதல்
நடுக்கத்தில்
குலை நடுக்கம்
கொள்கிறார்
என்றால்

இப்படி
பகைவருக்கு
நடுக்கம் தரும்

நம்
படை நடத்தல்
சரி தானே...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*